**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 263** **நாள்: 11.09.2025**

**மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள், மாண்டிசோரி பயிற்சி பெற்ற பெருநகர சென்னை மாநகராட்சியின் 33 மழலையர் பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி சான்றிதழ்களை வழங்கினார்.**

இன்று (11.09.2025) மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள், ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்வில் விடியல் மாண்டிசோரி பயிற்சி பெற்ற பெருநகர சென்னை மாநகராட்சியின், 33 மழலையர் பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி சான்றிதழ்களை வழங்கிப் பாராட்டினார்.

**இந்நிகழ்வில் மாண்புமிகு மேயர் அவர்கள் பேசும்போது தெரிவித்தாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்விக்காக முன்னுரிமை கொடுத்து பல்வேறு திட்டங்களை சிறப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள். பெருநகர சென்னை மாநகராட்சியின் சென்னை பள்ளிகளில் சிறந்த கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு சிறப்பான முறையில் மாணவர்களுக்கு கல்வி வழங்கப்பட்டு வருகிறது. இதில், மழலையர் வகுப்பில் குழந்தைகளுக்கு சிறப்பான கல்வியினை வழங்கிடும் விதமாக மழலையர் பள்ளி ஆசிரியர்களுக்கு விடியல் மாண்டிசோரி கல்வி அறக்கட்டளை சார்பாக மாண்டிசோடி பயிற்சி இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் குழந்தைகளின் கற்றல் திறனும், கவனித்தல் திறனும் சிறப்பாக மேம்பட்டுள்ளது. இத்தகைய சிறந்த பயிற்சியை சென்னை பள்ளிகளின் மழலையர் பள்ளி ஆசிரியர்களுக்கு சேவை நோக்கில் விடியல் மாண்டிசோரி கல்வி அறக்கட்டளை வழங்கியுள்ளது பாராட்டத்தக்கது.

கடந்த ஆண்டில் சென்னை மாநகராட்சியில் 33 மழலையர் பள்ளி ஆசிரியர்களுக்கு விடியல் மாண்டிசோரி பயிற்சி வழங்கப்பட்டது. நடப்பு ஆண்டிலும் 33 மழலையர் பள்ளி ஆசிரியர்களுக்கு வாரத்திற்கு இரண்டு நாட்கள் என 7 மாதங்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு தற்போது அதற்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. இதன் மூலம் சென்னை மழலையர் பள்ளி குழந்தைகளுக்கு கல்வி கற்றுத்தரும் ஆசிரியர்கள் மேலும், ஈடுபாட்டுடன் குழந்தைகளுக்கு சிறந்த முறையில் கல்வி கற்றுத்தர வேண்டும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாநகராட்சி ஆணையர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) திரு. ம. பிரதிவிராஜ், இ.ஆ.ப., மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் திரு. ந. இராமலிங்கம், விடியல் மாண்டிசோரி கல்வி அறக்கட்டளையின் பொருளாளர் திருமதி சுருதி கார்த்திக், நிர்வாகி திருமதி உமா சங்கர், பயிற்சி இயக்குநர் திருமதி ஹேமா ஸ்ரீதரன், மற்றும் கல்வி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**